# முகிலன் கவிதைகள்

T.
894.811.17
MAN

தொகுத்தவர்: மணிமொழி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF CEYLON
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Mukilan Kavitaikal

# முகிலன் கவிதைகள்

தொகுத்தவர்: மணிமொழி



காலஞ்சென்ற திரு. மு. வ. மாணிக்கவாசகர்
(முகிலன்) M.V. Manikkavacaka

வெளியீடு:
யாழ் கலை அரங்கம்
21, தட்டார ஒழுங்கை,
கொழும்பு-12.
(இலங்கை)

275722

VIJAYALUCKSHMI BOOK DEPOT
BOOK SELLERS & STATIONERS
248, GALLE ROAD,
WELLAWATTE
COLOMBO - 6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் கலை அரங்க வெளியீடு - 3.

முதற் பதிப்பு: புரட்டாதி 1964
உரிமை: வெளியீட்டார்க்கு

விலை

**ரூபா ஒன்று**

அச்சிட்டோர்:
விசாகா அச்சகம்,
60, ஸ்ரீ சங்கராஜ வீதி,
கொழும்பு-10.
(இலங்கை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF CEYLON
LIBRARY

# சமர்ப்பணம்

உடல், பொருள், ஆவி மூன்றையும்
முத்தமிழ்ப் பெருங்குடிக்கு ஈர்ந்து
அமரராகிய



## 'தீவின் திலகம்'

உயர் திரு

## வே. அ. கந்தையா

அவர்களுக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசக அன்பர்களே...!

முத்தாரமாம் "முகிலன் கவிதைகள்" முக்கனிச் சாறு போன்று உங்கள் கையில் மிளிர்கிறது. கற்பனைக் கண்ணில் காணும்பொழுது உள்ளமெலாம் களிக்கிறது.

சொல்லும் செயலும் ஒன்றென வாழ்ந்தவர்கள் மிகச் சிலரே. முகிலன் கவிதைகள் வெளியிட என்னைத் தூண்டியும் வேண்டியும் நின்றவர்கள் பலர்; ஆனால் அகமும் புறமும் மலர்ந்து ஊக்கமும் ஆக்கமும் தந்தவர்கள் சிலரே.

"காலத்தி னாற்செய்த நன்றிசிறி தெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது" —

என்ற பொய்யாமொழியை மெய்யாக்கொண்டு, பேராதர வளித்த பெருந்தகையாளர்களின் வண்மையால் இக்கவிதைத் தொகுப்பு வெளிவருகிறது என்று சொல்வதில் பெருமையும் நன்றியறிதலும் உடையேன்.

எண்ணத்தைக் கைவண்ண மாக்குவதில் தண்ணளியுடன் கை தந்த நல்லவர்கள் எல்லோரையும் ஈண்டுக் குறிக்க வியலாததற்கு உளம் வருந்துகிறேன். எனினும் பகுத்தறிவு இயக்க இலட்சியத்தால் ஒன்றுபட்டு, பொருளுதவியும் செய்த திருவாளர்கள் க. திருச்செல்வம், சி. மாணிக்கன், ந. இளமுகன் மற்றும் ச. மகாலிங்கம் ஆசிரியர், கவிஞர் 'தில்லைச்சிவன்' க. படிகலிங்கம் முதலியவர்களுக்கு எனது நன்றி.

நான்முகம் நாற்ற முத்தமிழ்க் காவலர் திரு. க. பொ. இரத்தினம், ஆசியுரை அளித்த கல்லூரித் தலைவர் திரு. அ.தி. சபாரத்தினம், நயந்துரை நல்கிய கடல் கடந்த தில்லிப் பேராசிரியர் திரு. சாலை இளந்திரையன், புகழுரை புகட்டிய பகுத்தறிவு இயக்க நண்பர் திரு. ஆ. வேலாயுதம், 'முகிலனின் வாழ்வுப் பாதையிலே......' யாத்தும் அருகிருந்து அச்சகப் பதிப்புகளைக் கண்ணும் கருத்துமாகக் கவனித்து உறு துணையாக இருந்த நண்பன் திரு. ஏ.பி. செல்லையா, பீ. எஸ். ஸி., திரு. செ. கணேசபிள்ளை எல்லோருக்கும் என் நன்றி.

கவிதைகளைத் தொகுத்தளித்த நங்கை மணிமொழி, எழில்கூட்டி அச்சிட்டளித்த விசாகா அச்சக நிர்வாகி திரு. ஆர். சண்முகம் மற்றும் தொழிலாளர்களுக்கும், மேலும் பல துறைகளிலும் உதவியளித்த ஒவ்வொருவருக்கும் என் உளங் கனிந்த நன்றியும் வணக்கமும்.

"தமிழ்மனை"
வேலணை–5.
27–9–64.

வேலணை நா. வீரசிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

"செந்தமிழ்க் கலை மணி,"

பேராசிரியர் **கா. பொ. இரத்தினம்** அவர்கள்

கலைஞர்களை நன்கு அறிமுகஞ் செய்யத்தக்கன அவர்களின் படைப்புக்களேயாகும். எனவே, கவிஞர் முகிலன் அவர்களை அறிமுகஞ் செய்தற்கு அவருடைய இப்பாடல்களே போதும். இவற்றைப் படிக்கும் அறிஞர் "விளையும் பயிரை முளையில் தெரியும்" என்று வியப்பார்கள் என்பதில் ஐயமில்லை.

உணர்ச்சியும், உறுதியும், உரைக்கும் திறனும் உள்ளார் ஓர் இளங் கவிஞரை இளந்துவிட்டோம். எனினும் அவருடைய இளம் உள்ளத்திலே துள்ளிய கருத்துக்களை இந் நூலிற் பொறித்து என்றும் நின்று நிலவச் செய்து விட்டோம். இந் நூலை எழிலுடன் வெளியிட்ட இளைஞர்களுக்கு என் நன்றி.

உருத்திரா வீதி,
கொழும்பு-6
1-9-64

கா. பொ. இரத்தினம்

# ஆசியுரை

**வேலணை மத்திய மகா வித்தியாலய அதிபர்**

**உயர்திரு. அ. தி. சபாரத்தினம் அவர்கள்**

**(பி. எஸ். ஸி.)**

வேலணை மத்திய மகா வித்தியாலய மாணவர்கள் மத்தியிலும் ஆசிரியர்கள் மத்தியிலும் என்றும் மறக்க முடியாத ஒரு தனி இடம், மாணவன் மு. வ. மாணிக்கவாசகருக்கு உண்டு. கல்வியில் உயர்ச்சி மட்டுமல்ல கடமையுணர்ச்சி மட்டுமல்ல அன்பும் பணிவும் கலந்த அவரது குண நலனும் ஆற்றலும் அறிவும் பொலிந்த செயற்றிறனுமே அவருக்கு இணையற்ற ஒரு தனி இடத்தைக் கொடுத்தன. மாணவர் மன்றங்களில் மாணிக்க வாசகர் காட்டும் ஊக்கமும் ஆக்கமும் மிகப் பாராட்டப்பட்டு வந்தது. எங்கள் மாணவன் மாணிக்கவாசகர் தான் புனைபெயரில் 'முகிலன்' ஆகத் தமிழுலகில் மின்னிக் கொண்டிருக்கிறார் என்பதை அறிந்து நாம் மகிழ்ச்சியடைந்தோம். பல்கலைக் கழகப் புகுமுகத் தேர்வில் அவர் பெற்ற வெற்றி விதியின் விளையாட்டால் அவருக்குப் பயனளியாத நிலைமை ஏற்பட்டபோதும் கல்லூரிக்குப் பெருமை தந்து நிற்கும் ஒரு செயலாகும், காலத்தால் முகிலன் வாழ்வு சுருங்கி நின்றபோதும் பயனாலும் சிறப்பாலும் அவர் வாழ்வு நிறைந்து நின்றமை நினைவுக்குரியது. அவரது ஆன்மா சாந்தி பெற்றமைய வேண்டும் என்பது எமது பேரவா.

அ. தி. சபாரத்தினம்

மத்திய மகா வித்தியாலயம்
வேலணை.
29-8-64

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயந்துரை

உயர்திரு· சாலை இளந்திரையன் அவர்கள்
தில்லிப் பல்கலைக் கழகம் (இந்தியா)

ஈழத்து முகிலனை வேலணையில் கண்டோம்; உரையாடி மகிழ்ந்தோம். கவிதை, கலை, தமிழ், மக்கள் நலன் என்னும் உயர்ந்த பொருள்களையே பற்றிப் படர்ந்தது எங்கள் உரையாடல்; அவைகளையே விரும்பி விரும்பி அருந்தி நெஞ்சு தளிர்த்தது அவ் விளைய 'முகில்'

நாங்கள் தாய் நாடு திரும்பிய பின்னும், ஈழத்துப் பலர் எங்களை மறந்த பின்னும், எங்களை மறவாமல் எம்மோடு கடிதத் தொடர்புகொண்டு; ஈழத்தின் கவிதை முயற்சிகள் பற்றித்தெரிவித்து மகிழ்ந்தார் முகிலன்.

அவரது பொதுப்பணி நாட்டத்தையும் அதற்கான அவரது முயற்சி ஈட்டத்தையும் வேலணைத் திருக்குறள் மாநாட்டிலே கண்டோம். அவரது நலன் நாடும் நெஞ்சினையும், நயந்தேடி அதனோடு தம்மைப் பிணைத்துக்கொள்ளும் மேன்மையினையும் பின்னக் கண்டு மகிழ்ந்தோம்.

உயர்ந்த நோக்க நீர் தேக்கி எழுந்துவந்த அவ் விளைய முகில், சூழ்கொண்டு கருத்துப் பொங்கி ஈழத் தமிழர்க்கு இன்ப மழை பொழியப்போகிறது என்று இருந்தோம். ஆனால் பறியாத மலரைப் பறித்து விட்டது காலம். எனினும் அம் மலரின் மணம், 'முகிலன்—முயற்சி' என்னும் நறுமணம், முகர்ந்தார் நெஞ்சக் கால்களில் ஓடிச் சமுதாயக் கழனி எங்கும் பாயும்; பாய வேண்டும்.

தில்லிப் பல்கலைக் கழகம்
தில்லி-5 (இந்தியா)
28-8-64

சாலை இளந்திரையன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகழுரை

உயர்திரு. 'பகுத்தறிவு'
**ஆ. வேலாயுதம்** அவர்கள்

அவன் ஒரு மாணவன். எனினும் அவன் உள்ளம் சமுதாயத்தைப் பற்றிச் சிந்தித்தது. நாள்தோறும் தேய்ந்து உருக்குலைந்து கொண்டிருந்த தமிழினத்தின் நிலை கண்டு அவன் வாடினான். ஏன் இந்த நிலை என வினவினான். சமுதாயச் சீர்கேடு என அவன் கண்டான். சீர்கெட்டிருக்கும் சமுதாயத்தை மாற்றியமைத்தாலன்றித் தமிழினத்தின் அழிவைத் தடுக்க முடியாதென முடிவுசெய்தான். சமுதாயப் புரட்சி செய்ய உறுதிகொண்டு செயலில் இறங்கினான்.

வறுமையும் நோயும் அவனைப் பின் தொடர்ந்தன. கையாலாகாதவர்கள் கிண்டல் செய்தனர். எனினும் அவன் சோர்ந்தானில்லை. கைக்கொண்ட பணியைக் கைவிட்டானில்லை. அடி எடுத்து வைத்த பாதையில் அவன் சென்று கொண்டிருந்தான். சில தூரங்கூட அவன் செல்லவில்லை. கொடுமை! கொடுமை!! கொடிய நோய் அவனை விழுங்கியது அவனின் பேச்சு மூச்சு எல்லாம் அடங்கியது. அவன் எல்லாரையும் விட்டு மறைந்தான். அவன் மறைந்த போதும் அவனின் புகழ் மறையவில்லை. அவன் விட்டுச் சென்ற கவிதை மலர்கள் அவன் புகழை என்றும் அள்ளி வீசியவண்ணமிருக்கும் என்பதில் ஐயமில்லை.

'பகுத்தறிவு' ஆ. வேலாயுதம்

பஸல்ஸ் லேன்,
கொழும்பு 6.
3-9-64.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் திருநாடு

ஈழநாடு எங்கள் இன்பத் திருநாடு
எம்மவர் வாழ்ந் திடும் பொன்னாடு
இசையின் காவலன் இராவண மன்னன்
இருந்தர சாண்ட இலங்கை நாடு.

மயிலாடும் பாறை குயில் கூவும் சோலை
மான் மருண் டோடும் காடு இசைபாடு வாவி
நெளிந்தோடும் ஆறு அடர் பெரு வனங்களும்
நன்செய் புலங்கள் மிகுஈழத் திருநாடு

சிங்கள மக்களுடன் செந்தமிழ்ச் செல்வரும்
சேர்ந்து இசை பரப்பிடும் ஈழமணித் திருநாடு
இந்துமா கடலில்ஓர் நல்முத்தனைய நம்
ஈழத்தீவு எங்கள் இலங்கை நாடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தை

மாலை நேரம் தோட்டத்தில்
மகிழ்ந்திருக்கும் குழந்தாயே
சோலைத் தென்றல் சுவைத்து—நீ
சிரித்து உள்ளம் மகிழ்ந்தாயோ?

உயர வளர்ந்த மரங்களுமே
உன்னைச் சூழ்ந்து இருக்கையிலே
பயமே சிறிதும் இன்றி—நீ
பார்த்திருப்ப தெதனையோ?

அஞ்சி நித்தம் செத்திடும்
அவனி மாந்தர் பலருக்கு
பிஞ்சுக் குழந்தாய் நீயும்—நற்
பாடம் புகட்ட வந்தாயோ?

நெற்றி தன்னில் திலகமிட்டு
நீண்ட மயிரைச் சீவி விட்டு
வெற்றிச் சிரிப்பை உதிர்க்கும்—நீ
விரலை வாயில் வைப்பதுமேன்?

காலில் செருப்பு மாட்டியும்
மேலிற் சட்டை பூட்டியும்
காலை நீட்டி இருக்கும்—நீ
யாரைப்பார்த்துச் சிரிக்கின்றாய்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புறப்படுவீர்

சாதி என்று பெயர்கூறி பிரிவு காட்டி
சகோதரருள் ஒற்றுமையைக் குலைத்து நிற்கும்
நீதியற்ற நெறிமுறையைக் கடிந்து சாடி
நல்ல தொரு கருத்தையிங்கு நாமும் சொல்வோம்
ஆதிமுதல் இன்று வரை சாதியாலே
அடைந்தோமா நன்மை யெனில் இல்லை இல்லை
பாதியிலே வந்துற்ற மடமையாலே
பாழாகிப் போனதடா தமிழர் வாழ்வு!

செந்தமிழர் சமுதாயம் சீர்மை குன்றி
செல்லரித்த ஏடாக மாறி நிற்க
வந்துற்ற காரணங்கள் பலவு முண்டு
விரைவினிலே அவைதனையே நாமகற்றி
நொந்துள்ள தமிழ்த்தாயின் தளையை நீக்கி
நல்ல தொரு சமுதாயம் காணவேண்டும்
பொந்துள்ளே பதுங்குகிற எண்ணம் விட்டு
புறப்படுவீர் பகுத்தறிவுப் பாதை நோக்கி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலரும் வண்டும்

வானில் கதிரெழும் நேரம்
வண்ண மலர்ச்செடி ஓரம்
தேனினை நாடிடும் வண்டு
தேடியே வந்தது அங்கு!

பட்டு மலரிதழ் மேலே
பறந்து அமர்ந்தது தானே
சொட்டும் தேனினை வண்டு
சுவைத்து மதிழ்ந்தது நன்கு!

பின்னர் அதுவும் எழுந்து
பிறிதொரு மலரில் அமர்ந்து
பொன்னிற மாகிட மேனி
புரண்டு மகிழ்ந்தது தேனி!

அழகிய மலர்களைப் போன்றே
அரிவையர் சிலருளர் தாமே
பழகிடும் வண்டுகள் போன்றே
பண்பிலா ஆண்களும் உண்டே.

வண்டு பலமலரினை நாடும்
வண்ண மலரவற்றுடன் கூடும்
பண்பாடு அவற்றினிற் கேது?
பைந்தமிழ் வாழ்வுமே வேறு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிஞனாக வேண்டும்

கவிஞனாக வேண்டும்—நானோர்
கவிஞனாக வேண்டும்

உலகெலா முள மக்கள் யாவரும்
உவகை மீறியே புகழுமாறு யான்
இலகு செந்தமிழ் பனுவல் செய்துமே
இன்தமிழ் மொழிக்கேற்ற மூட்டிடும்

கவிஞனாக வேண்டும்—நானோர்
கவிஞனாக வேண்டும்

வீறு கொண்ட நம் தமிழர் நாட்டினில்
வீர காதைகள் நானும் பாடிட
ஏறுபோன்ற நல் இளைஞர் யாவரும்
இளைய மகளிரும் இனிது போற்றிடும்

கவிஞனாக வேண்டும்—நானோர்
கவிஞனாக வேண்டும்

அரியணையிலே அன்னை செந்தமிழ்
அமர்ந்துமே யருட்காட்சி சந்திட
உரிமையோடி யான் உளம் மகிழ்ந்துமே
உணர்ச்சி பொங்கிடக் கவிதை செய்திடும்

கவிஞனாக வேண்டும்—நானோர்
கவிஞனாக வேண்டும்

UNIVERSITY OF CEYLON
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புறப்படு தமிழா!

[மாலையிட்ட மங்கை படத்தில்
"அன்னையின் நாட்டை"...என்ற மெட்டு]

புறப்படு தமிழா — புறப்படடா
அன்னையின் மொழியினைக் காத்திடவே நீ
புறப்படடா தமிழா புறப்படடா
உன்னரு மொழியாம் செந்தமிழினுக்காய்
உயிரையும் ஈந்திடப் புறப்படடா

புறப்படு தமிழா புறப்படடா
கன்னலைப்பழித்த கன்னித்தமிழா கலங்குகின்ற அவள்
இன்னலை நீக்கிட உடனே நீயும் புறப்படடா

புறப்படடா தமிழா புறப்படடா
மன்னவர்மூவர் மடிதனில் அன்று
மாண்புடன் வாழ்ந்தாளே — இன்று
அன்னவள் நிலையை அவனியுங் கண்டு இரங்குதடா
இன்னமுகதத் ட மிழ் என்றும் தழைத்திட
உடனே நீயும் புறப்படடா
புறப்படு தமிழா புறப்படடா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதியதோர் சமுதாயம்

புதியதொரு சமுதாயம் உருவாக வேண்டும்
புதுமைகளில் நல்லவற்றை நாம்நாடவேண்டும்
பழமைகளில் பாசிகளைப் போக்கிடவும் வேண்டும்
பாரெங்கும் பைந்தமிழர் புகழ்பரவ வேண்டும்

பாடுபடும் தொழிலாளி பயனடைய வேண்டும்
பாட்டாளி மக்கள்தம் குறைதீர வேண்டும்
நாடுதனில் நல்லாட்சி நடந்திட்டால் என்றும்
நீதிநெறி தழைத்தோங்கி நின்றிடுமே இன்பம்

வெண்சுருட்டுப் பிடிக்கின்ற வாலிபனே நீகேள்
வீணாக ஏனப்பா கெடுகின்றாய் புகையால்
பண்போடு வாழ்வதையே விரும்புகின்றாள் உன்தாய்
பகட்டாக வாழ்வதிலே பெருமையில்லை உணர்வாய்

மதமூட நம்பிக்கை தனையொழித்து மக்கள்
மறுமலர்ச்சிப் பாதையிலே நடந்திடுதல் நன்மை
எதனையும் ஆராய்ந்து பார்த்திட்ட பின்பே
ஏற்றிட்டால் அணுகாதே அணுவளவும் தொல்லை

பிறப்பாலே பேதங்கள் எந் நாளும் இல்லை
பிறகேனு சாதிப் பெருமடமைக் கொள்கை?
இறவாத புகழுடைய பெரியோர்கள் இதனை
எடுத்தன்றோ உரைத்துள்ளார் ஏற்காயோ உண்மை

மதுவதனை ஒழித்திடுதல் மக்களுக்கே நன்மை
மாதர்தமை இழிவாக விற்றிடுதல் மடமை
வதுவைப் பொழுதினிலே வழங்கு மொருகொடுமை
வரதட்சணை ஒழித்தலிங்கு வாலிபர்தங் கடமை

கைபிடித்த மனைவியவள் இறந்துவிட்ட போது
கணவனவன் மறுமணந்தான் செய்கின்ற போது
தான் பிடித்த கணவனை இழந்துவிட்ட மாது
திருப்பவும் மணம்பெற்றால் அதுவென்ன தீது?

உடமையெல்லாம் உழைப்பவர்க்கே உரித்தாகும்போது
ஊர்செழிக்க அவரெல்லாம் உழைத்திடுவர் நன்கு
கடமையினைக் கண்ணியமாய்ச் செய்திடுதல் நன்றே
கண்டிடுவோம் புதியதொரு சமுதாயம் இன்றே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிர்வாண நிலவு

கோடி கதிர் வீசி—அருங்
கோல அழகூட்டும்
ஏடி நிலவுப் பெண்ணே—நீ
இருக்கின்ற நிலையுமென்னே!

மேலிற் துணியுமில்லே—ஒரு
மேக மறைப்பு மில்லை
காலக் கொடுமையடி—நீயோர்
கற்புள்ள கன்னியோடி?

பிறந்த அம் மேனியுடன்—அடி
பேதைநீ திரிகின்ருய்
மறந்தும் ஒருநாளும்—நினக்கு
மானமும் இல்லையோடி?

மானம் உனக்கிருந்தால்—ஓடி
மறையடி முகிலுக்குள்ளே
வானத்து மீன்கள் எல்லாம்—சுடர்க்கண்
வீசிச் சிரிப்பதைப் பார்

என்னடி காரணமோ—நீ
இப்படித் திரிவதற்கு
என்ன அலங்கோலம்—இது
ஈனச் செயலல்லவோ?

பித்துப் பிடித்ததோடி—அன்றிப்
பருவத்தின் கோலமோடி
எத்தன் ஒருவனுமே—உன்னை
ஏமாற்றி விட்டானோடி?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தரை மீதினிலே — உனக்கு
இணையார் இல்லையென்றே
எத்தனை கர்வமடி — உனக்கேன்
இத்தனை பித்தமடி?

போதை மயக்கத்திலே — சில
புன்னகைக் கவிஞர் உன்னை
மாதர் முகமெனவும் — வாச
மலரென்றும் சொல்லிவிட்டார்

அந்தக் கிறுக்கினிலே — உந்தன்
ஆடை குலைந்ததையும்
மந்தமதி கொண்டாய் — காண
மறந்து விட்டாயோடி?

ஒப்புகுத்க் துணியுடுக்கும் — இற்றை
ஒயில் நடை மகளிர்க் கெல்லாம்
தப்புச் சிறிது மின்றி — நீயே
தலைவி தலைவியடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வானப் பந்தர்!

தாங்கும் தூணும் இல்லாமல்
தச்சன் வேலை செய்யாமல்
தொங்கும் வானப் பந்தலிலே
தோன்றும் அழகைப் பார் தம்பி

நீல வண்ணப் பட்டதனை
நீள விரித்து அதன் மேலே
கோல முத்துப் பரல்களையே
கொட்டி விட்டான் ஒரு செல்வன்

கூனற் பிறையைத் தன் முடியில்
கொண்ட உலக முதல்வனுமே
வானப் பட்டு ஆடைமேல்
வளர்த்தி விட்டான் இளம் பிறையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது தலைவன்

("நான் பெற்ற செல்வம்'' என்ற மெட்டு)

நாம் கொண்ட தலைவன் நயமான தலைவன்
பைந்தமிழ் பேசிடும் பாங்கான தலைவன் (நாம்)

பகுத்தறிவாளன் பைந்தமிழ் கண்டோன்
பாரினில் நம் தமிழ் வாழ்ந்திட வந்தோன் (நாம்)

கண்டார் வியக்கும் நம் நாடு இன்ப திராவிட நாடு
அடைந்த இழிநிலை போக்கிட வந்தோன். (நாம்)

எங்கோ இருந்தோ இங்கு வந்தார்
இன்னல்கள் தந்தார் நம் நாட்டினிற்கே
பண்பே இல்லா ஆரியரின் சூழ்ச்சியினால்
வீழ்ச்சியுற்ற திராவிடமே திரண்டிடுவாய்
இவர் பின்னே (நாம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கு மறைந்தனள்?

வெள்ளைக் கடற்கரை யோரத்திலே — தென்றல்
        வீசிடும் மாலை நேரத்திலே
வெள்ளை மணற் குன்றின் மீதினிலே — நான்
        வீற்றிருந்தேன் எழில் பார்த்திருந்தேன்.

கரையை அடுத்துள மணற்பரப்பில் — இளங்
        கன்னியர் போற்பல தென்னைகளாம்
நிரை நிரையாக நின்றுகொண்டு — நல்ல
        நிழலினைத் சந்தன பருகி நின்றேன்.

சில்லென்று வீசிடும் மென்காற்றில் — என்
        சிந்தையைப் பறி கொடுக்கையிலே
சள்ளென்று ஓரொலி கேட்டவுடன் — நான்
        சட்டென்று பார்வையைத் திருப்பி விட்டேன்

மொட்டொன்று மலர்ந்தது போலேயங்கு — மதி
        முகமொன்று கடலிடை நீந்தக் கண்டேன்
வெட்டியடித்திடும் மின்னலைப் போல் — நகை
        வீசியோர் மலர்க்கொடி நீந்தி நின்றாள்.

துள்ளும் கடற் கயல் மீனிரண்டு — அத்
        துடியிடை யாளின் முகத்திலுண்டு
கள்ளரிப்பு முல்லை மலைச்சாரமோ — அக்
        கன்னியின் வாயிடை மிளிர்வது தான்.

தெங்கின் சுவைமிகு இளநீரோ — கோயில்
        தேரினில் மேலுள முடியதுவோ?
மங்குப்பான் மணல் செறி குன்றுகளோ — அவை
        மங்கையர் துணைக் கொங்கைகளோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்ணில் விளங்கிடும் பிறைநிலவோ — அன்று
வெட்டிய பூசணிக் கீற்றெனவோ?
நண்ணும் அழகுடை மங்கையவள் — எழில்
நெற்றிக் கிணையென ஏதுரைப்பேன்?

மேலிலோர் ஆடையெதுவுமின்றி — வெறும்
மேனி யோடங்கவள் நீந்துகிறாள்
மேலைத் திசையினில் போகும் பரிதி — அவள்
மேனி ஒளியினால் மங்குகின்றாள்.

உலகையே மாற்றிடும் பேரழகால் — எந்தன்
உள்ளந்தனையவள் பறித்தனளே
நிலவினைக் கண்டதோர் கடலினைப்போல் — நான்
நிலை தடுமாறியே உழன்று நின்றேன்.

வெள்ளிப் பணமதை நான் வேண்டேன் — உயர்
வளித்திடும் புகழினை யான் வேண்டேன்
கள்ளியவள் தன் கண்மலரால் — என்றும்
காட்டிடும் இன்பமே மிக வேண்டும்

மெள்ள மெள்ள அவள் நீந்தி நிற்பாள் — சற்று
மறைந்துமே காணுமற் போயிடுவாள்
வெள்ளந்தனில் மலர் பூத்தது போல் — பின்னர்
வந்து கடலின் மேல் தோன்றிடுவாள்.

பவள நிறத் தெழில் வாய் திறந்து — அவள்
புரியாத மொழியினில் பண்ணிசைப்பாள்
தவழும் குழந்தையைப் போல் — அது
தேனையும் கசந்திடச் செய்ததம்மா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கிய கண் கடை வீச்சதிஞல் — எனை
நீரினுள் நீந்த வருக வென்ருள்
தேக்கிய மதுவினைச் சுவைப்பதற்கு — மலர்
தேனீயை வாவெனில் மறுத்திடுமோ?

ஏவிய அம்பு விரைவது போல் — நான்
என்னை மறந்த நிலைதனிலே
தாவியே பாய்ந்தனன் ஆவலுடன் — எழில்
தாங்கிய மங்கையின் அருகினிலே.

என்ன அதிசயம் கண்டேனங்கு — என்னை
இங்கு வருகென அழைத்தவளும்
சின்னஞ் சிறுவர்கள் ஏய்ப்பதுபோல் — வெகு
சேய்மையிலே நீந்தி ஓடுகிருள்.

என்னுடலிற் பலமுள்ள மட்டும் — இன்று
எட்டி அவளைப் பிடிப்பதென்று
அன்னவள் பின்னே யானும் சென்றேன் — அவள்
எங்கு மறைந்திலள் காண்கிலனே.

# இரும்பா உன் இதயம்?

கன்னியே கவிஞர் போற்றும்
காவியத் தழகி உன்னை
முன்னமே யானும் கண்டு
மோகமே கொண்டு விட்டேன்
என்னதான் வெறுப்புக் கொண்டு
என்னை நீ விலக்கினாலும்
அன்னமே உன்னை நானும்
அடைவ தென்றுறுதி கொண்டேன்.

பெண்டிநின் உள்ளமே தான்
பனிக்கட்டி போன்ற தன்மை
கொண்டதே யென்று யானும்
கூறவே கேட் டிருந்தேன்
கண்டவர் மயங்கி நிற்கும்
கன்னியே உன்னை யெண்ணி
உண்பதும் மறந்தேன் என்னை
உயிரே நீ வெறுக்கலாமோ?

மானென வெருட்சி கொண்டாய்
மயிலென சாயல் கொண்டாய்
வானினை முட்டி நிற்கும்
வரைகளை மார்பில் கொண்டாய்
தேனுடை இதழுங் கொண்டாய்
திங்களின் வதனங் கொண்டாய்
ஏனுமோ நீதா னுந்தன்
இதயத்தை இரும்பாய்க் கொண்டாய்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழிய தமிழ்க்கலை

வாழிய செந் தமிழ் வாழிய செந் தமிழ்
வாழிய ஈழ நாடிதுவே
ஆழி சூழ் உலகினில் அன்னையே உன் புகழ்
எங்குமே பரவுகவே

வாழிய தமிழ் மறை வாழிய தமிழ் மறை
வாழிய வள்ளுவன் புகழதுவே
வாழிய தமிழ்க் கலை வாழிய தமிழ்க்குலம்
வாழிய வாழிய ரோ!

வாழிய செங்கதிர் வாழிய செங்கதிர்
வாழிய உலகினை ஓம்புவதால்
வாழிய திங்களே வாழிய திங்களே
வாழிய தண்கதிர் வீசுவதால்

வாழிய வையகம் வாழிய வையகம்
வாழிய உத்தமர் யாவருமே
யாழ் கலை அரங்கமும் புகழுடன் என்றுமே
வாழிய வாழியரோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மழலை இன்பம்

அன்புடன் அமுது படைத் தளித்திட்ட
அருமனையாளின் ஆரமுதுண்டு பின்
என் தவப்புதல்வன் இளங்கோவன் தன்
இன் சொல்லதனை இன்புடன் கேட்டு
அன்பு மனைவியின் அடிசிலைப் பாத்து
அயர்ந்து கண்ணுறங்க அடைந்தேன் கட்டிலை
அப்பா யானும் உன்னுடன் கிடப்பேன்
என்றென் செல்வன் எழில் மிகு குமரன்
தன்வாய் திறந்து தமிழினைப் பொழிந்தான்
தாவி அணைத்து தண்மதி முகத்தில்
ஆயிரமாயிரம் முத்தங்கள் ஈந்து பின்
அன்புடன் அருகில் அணைத்தேன்; அயர்ந்தேன்.

## தமிழ்

செந்தமிழென்னும் பெயர் பூண்டாள் அவள்
செகமது குளிர்ந்திடப் புவி கண்டாள்
சங்கம் தனிலே தான் வளர்ந்தாள் — அவள்
எங்கும் புகழுடன் பவனி வந்தாள்

இமயம் தனிலே கொடிநாட்டி — இரு
வடவர் தலையில் கல் ஏற்றி
அலைகடல் எங்கும் கலம் ஏட்டி — அவள்
நிலைபெறு புகழுடன் வாழ்ந்திட்டாள்

* 275722

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்பப் பொங்கல்

ஞாலம் எங்கும் பரந்து
நம் தமிழர் வீடெலாம்
கோலம் பெற்றுப் பொங்கலின்
குதூகலிப்புத் தோன்றிடும்

உயர்வு தாழ்வு இன்றியே
உலகத் தமிழர் ஒன்றியே
அயர்வு நீக்கும் ஆதவன்
அடிபணிந்து வாழ்த்துவர்

உழவர் உள்ளம் தோய்ந்து நல்
உவகை வெள்ளம் பாய்ந்திடும்
மழலைப் பிஞ்சு நெஞ்சிலும்
மகிழ்வு நின்று விஞ்சிடும்

பெண்குலக் கொடிகளும்
பின்னும் உள்ள தமிழரும்
மண்ணில் என்றும் இலாதவாறு
மகிழ்வு கொண்டு ஆடுவர்

பச்சை அரிசிப் பொங்கலை
பார்க்க நாவும் ஊறுமே
இச்சகத்திலே தமிழ்
இன்பமுண்டு தோழரே!

பொங்கல் பொங்கல் பொங்கலே!
பெருமை மிக்க பொங்கலே!
எங்கள் உள்ளம் மகிழவே
என்றும் வருக பொங்கலே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தைகள் செல்வம்

வாழ்க்கை யெனும் பூங்காவில்
வண்ண மலராகி நின்று
வாசந்தனை வீசுகின்ற
வாடா மலரே நீ!

காதற் பெருங்கடலில்
கூடிக்குளித்துப்பின்
காதலர்கள் தான் பெற்ற
கட்டாணி முத்தே நீ!

ஒளிரும் மின்னலெலாம்
ஒன்றாகச் சேர்ந்து பின்
உருவம் பெற்று நீ
உளம் மகிழ வந்தாயோ?

விண்ணகத்து மீன்களெலாம்
வந்து உருமாறிய பின்
கண்களாய் வந்துனக்கு
காட்சியினைத் தந்தனவோ?

மெல்லநடை பயிலும்
மென் காலன்னமுமே
செல்வ! உன் நடைகண்டால்
சோர்ந்து தலை குனிந்திடுமே!

வானகத்து வெண்ணிலவும்
விளங்குமுன் முகம் கண்டால்
மானம் தனைப்பிடுங்க
மறைந்திடுமே முகிலிடையே!

அம்மாவென்றே நீ
அழைக்கின்ற வார்த்தையிலே
அன்பொழுகும் தேனொழுகும்
அழகு தமிழ் தான் சிறக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பா வென்றே நீ
அழைக்கின்ற போதினிலே
தப்பாது அவரெல்லாம்
தாவிஉனை அணைப்பாரே!

அன்னை வென்றே நீ
அழைக்கின்ற சொல் கேட்டால்
உண்ணாமல் இருந்தாலும்
உற்றபசி தோன்றாதே!

அக்கா வென்றே நீ
அழைத்திட்ட போதினிலே
அக்காவும் ஓடி வந்து
அணைத்து மிக மகிழ்வாளே!

மெத்தப் படித்த பல
மேதைகள் கூடவுந்தன்
மழலைமொழி கேட்டவுடன்
மகிழ்வு மிக்க கொள்வாரே

எந்த இலக்கியமும்
எனக்கின்ப மளிக்காதே
உந்தன் மலர் முகமே
உண்மைக் கவி இன்பம் தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீல வானத்தைப் பார்!

தம்பி தம்பி இங்கே வா! நீ
தும்பி போலே விரைந்து வா!
நீல வானம் தன்னைப் பார்—அதன்
கோலம் தன்னை நீயும் பார்!
கடலில் எழும் அலையைப் போல்—அதன்
உடலில் தவழும் முகிலைப் பார்
கடல் மீனின் வடிவம் ஒத்த—பல
உடுக் கூட்ட மதனைப் பார்!
விண்ணின் மீது அவை இருந்து—தம்
கண்ணைச் சிமிட்டும் எழிலைப்பார்
எண்ணிப் பார்க்க முடியாத—பல
வண்ணத் தாரகை அவை எல்லாம்.

## கண்ணகி இருக்க மாதவி ஏன்?

பிற நாட்டு ஆடையதாம் கோட்டும் சூட்டும்
போட்டாலே தீட்டென்ன என்கின்றீரே
மாலையிட்ட கண்ணகியாள் இருந்திடவே
மாதவியாம் மடக்கொடியை நாடல் நன்றோ
நம் தமிழர் ஆடைபல இருந்திடவும்
நாடுவதோ பிறநாட்டார் உடைகள் தன்னை
நம்பண்பை நாம் பேணல் நம் கடமை
நாளும் நாம் அணிந்திடுவோம் நம் உடையை?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தை பிறந்தது

கங்குல் பிறந்தது செங்கதிர் வந்தது
காலை மலர்ந்ததடி—நம்
தங்கத் தமிழர் தம் பங்கம் பறந்திடத்
தையும் பிறந்ததடி

செந்நெல் கரும்புடன் மஞ்சளுமே செகம்
எங்கும் குவிந்ததடி—தேன்
கன்னற் பிழிவுடன் கரைபுரண் டோடிக்
கனிகள் கிளர்ந்ததடி.

உளவர் மடவார் சிறுவர் உளம்
இன்பம் நிறைந்ததடி—இம்
பாரெங்கும் தமிழர் மனைதொறும் பால்நுரை
பாய்ந்து வழிந்ததடி.

எங்கும் இளநகை எங்கும் மகிழ்வொளி
எங்கும் பொங்கலடி—புகழ்
தங்கிய தமிழர் வாழ்வு சிறந்திடத்
தையும் பிறந்ததடி.

MICROFILMED
Positive
Negative 1 11065
Reel No.
Date: 8/11/91


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செங் கதிரோன் எழுந்தனன்

கூவின சேவல்கள் தாரகை மலர்ந்தன
காரிருள் அகன்றது கரைந்தன காக்கைகள்
வாவிகள் எங்கும் மலர்ந்தன கமலம்
ஏரிகள் எங்கும் கூம்பின கூம்பல்

கானம் இசைத்தன வண்டுகள் எல்லாம்
மாந்தளிர் கோதிடும் குயிலினம் பாடிட
வானம் வெளுத்தது பனித்துளி மறைந்தன
செங்கதிரோன் எழுந்தனன் கீழ்திசைமீது

MICROFILMED



UNIVERSITY OF CEYLON
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

MICROFILMED
Positive
Negative 1
Reel No. 1/065
Date; 8/11/91

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF CEYLON
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகிலன் வாழ்க்கைப் பாதையிலே....

திரு. ஏ பி. செல்லையா, பி. எஸி. ஸி.

நல்லளித்தொகுதியாம் ஊர்காவற்றுறையில் வளமெலாம் கூடி விளங்கிடும் வேலணையில் வண்மை மிகுந்த பெரியோன் வல்லிபுரத்திற்கு அன்பே உருவாம் அன்னம்மாள் ஆன்ற நல்லறிஞர்கள் நல்லாசி வழங்கிட, சுற்றம் அகமகிழ்ந்திட 1942ம் ஆண்டு மாசித் திங்கள் முதலாம் நாள் நண்பகலில் பார்புகழக் காட்சி நல்கினார். மாண்பு மிகுந்திடும் மாணிக்கவாசகர் எனும் முகிலன்.

அகத்தின் அண்மையிலுள்ள சைவப்பிரகாச வித்தியாசாலையில் ஆரம்ப கல்விக்காக அடியெடுத்து, துள்ளும் பள்ளிப் பருவத்தை சேய்மையிலுள்ள வேலணை மத்திய கல்லூரியில் கழித்தார் எண்ணையும் எழுத்தையும் கண்ணெனப் போற்றி பல்கலைக் கழக நுழைவுத் தேர்வுவரை ஞானசித்தி பெற்றார்.

ஆர்த்தெழும் ஆழிசூழ் உலகைவிட்டுப் பிரிவதற்கு ஒரு திங்கட்கு முன்னால் அரசாங்க எழுத்து வினைஞராகவும், இலங்கைப் பல்கலைக் கழக மாணவராகவும் தெரிவு செய்யப்பட்டார்.

காலமெல்லாம் தனை நினைந்து கண்ணீர் வெள்ளத்தில் புரளக்கு கனேஸ்வரி (மணிமொழி), கோகிலாம்பாள், திருமகள் ஆகிய தங்கைகளையும் நாவேந்தன் எனும் ஒரே தம்பியையும் பெற்றிருந்தார்.

இருபத்தைந்து ஆண்டுகள்கூட இனிதே முடிவதற்கு இன்னும் இரண்டரை ஆண்டுகள் இருந்தன. இக் குறுகிய வாழ்வுக் காலத்தில் பரணி பாடித் தரணியாண்ட நமது தமிழக அரசியல் அலைகளை எதிர்த்து நீந்தத் துடித்தார்.

'நான் பெற்ற இன்பம்' பெறுக இவ்வையகம் என்பதற்கிணங்க 1. வேலணை வடக்கு பாரதி இளைஞர் கழகம், 2. யாழ் இளம் எழுத்தாளர் மன்றம், 3. தீவுப்பகுதி எழுத்தாளர் மன்றம், 4. கல்லூரி உயர்தர மாணவர் கழகம், 5. சோழாவத்தை சனசமூக நிலையம், 6. அகில இலங்கை பகுத்தறிவு இயக்கம் முதலிய நற்பணியாளர் சங்கங்களில் அங்கத்துவன் முதல் புரவலர் வரையான நிலைகளை வகித்துப் பொதுப்பணி புரிந்தார். அது மாத்திரமல்ல அகில இலங்கை வேலணை இளைஞர் கழகம் அமைக்க அல்லும் பகலும் அயராது உழைத்த உத்தமர்.

மூடக் கொள்கைகளால் அறியாமையில் நின்றுலவிய மக்களுக்குப் பகுத்தறிவுக் கருத்துக்களைப் புகுத்திப் புதுவாழ்வு மலர அயராதுழைத்த தீரர். கொண்ட கொள்கையால், செய்த சேவையால் சேற்றிலிருந்தவர்களை மேட்டுக்கழைத்த கர்ம வீரர்.

275722
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org